

ஆவணி மாதம் ஸ்திர மாதம். வைகாசி, கார்த்திகை, மாசி ஆகியவையும் ஸ்திர மாதங்களே. ஆனால், ஆவணியில் சூரியன் தன் சொந்த வீட்டில் ஆட்சி பெற்று வலுவாக அமர்கிறார். சூரியனே ஆத்மகாரகன் என்றும், பிதுர்காரகன் என்றும் அழைக்கப்படுகிறார். இதன் காரணமாக சூரியன் வலுப்பெறும்போது எந்த காரியத்தை செய்தாலும் சிறப்பான பலனைத் தரும்.

## ஆவணி மாதத்தின் சிறப்பம்சங்கள்

ஆடி போய் ஆவணி வந்தால் நன்மை கூடி வரும்' என்பதைப் போல் ஆவணி மாதம் மிகச் சிறந்த மாதமாக கருதப்படுகிறது. ஆடியில் சில நிகழ்ச்சிகள் செய்யமாட்டார்கள். ஆவணி தொடங்கியதும், உடனே அந்த நிகழ்ச்சியினை வைத்துவிடுவார்கள்.

**ஆவணி மாத ஞாயிற்றுக்கிழமை :**

ஆவணி மாதம் வரும் ஞாயிற்றுக்கிழமை விரதம் இருப்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஏனெனில் ஞாயிறு என்றாலே சூரியன். அது மட்டுமின்றி, ஆவணி மாதத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைதோறும் காலை 6.00 - 7.00 மணி வரை சூரிய ஒரையே இருக்கும். ஆவணியில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஆன்மீக அறிவைப் புகட்டினால், அவர்கள் அதில் சிறந்து விளங்குவார்கள். தேகநலனுக்காக சூரிய நமஸ்காரப் பயிற்சி எடுப்பவர்கள் ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் தொடங்குவது மிகவும் விசேஷமாகும்.



## விநாயகர் சதுர்த்தி :

விநாயகருக்கு உரிய விரதங்களுள் மிக விசேஷமானது விநாயகர் சதுர்த்தி. விநாயகரை போற்றி வரும் ஆவணி சதுர்த்தியான விநாயகர் சதுர்த்தியில் விரதமிருந்து வழிபட அனைத்து நன்மையும் கிடைக்கும்.

**ஆவணி மாத வளர்பிறையின் சிறப்பு :**

ஆவணி மாதத்தில் கிரகப்பிரவேசம் செய்தால் அந்த வீட்டில் நீண்ட நாட்கள் தங்கலாம். திருமணம் செய்தால் வாழ்க்கை சிறப்பாக அமையும்.

விவசாயத்திலும் ஆவணி மாதம் சிறப்பான இடத்தை பிடித்துள்ளது. ஆடிப்பட்டம் தேடி விதைக்கும் விவசாயிகள், ஆவணி மாதத்தில் சற்றே ஓய்வு எடுத்துக்கொள்வதுடன், ஒட்டுமொத்த வேளாண் மக்களும் தங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விஷயங்களை, விழாக்களை நடத்தி மகிழ்வார்கள்.

இத்தகைய சிறப்பம்சம் நிறைந்த ஆவணி மாத வளர்பிறையில் கடவுளை மனமுருகிப் பூஜித்து அனைத்து நலன்களையும் பெறுவோம்.

## ஆவணி மாத வளர்பிறை மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறதே ஏன்?

ஆவணி மாதம் ஸ்திர மாதம். வைகாசி, கார்த்திகை, மாசி ஆகியவையும் ஸ்திர மாதங்களே. ஆனால் ஆவணியில் சூரியன் சொந்த வீட்டில் ஆட்சி பெற்று வலுவாக அமர்கிறார்.



## ஆவணி ஞாயிற்றுக்கிழமையின் மகத்துவம் பற்றி தெரியுமா?

ஆவணி மாதத்தில் சூரியன் சிம்ம வீட்டில் ஆட்சி செய்கிறார். சூரியனுக்கு சிம்ம வீடு பலமான வீடு. நமக்கு ஆத்மபலத்தை தருபவர் சூரியனே. எனவே தான், ஆவணி மாதத்தில் விநாயகர் அவதாரம், கிருஷ்ணர் அவதாரம் ஆகியன நிகழ்ந்ததாக பெரியோர்கள் சொல்வார்கள்.

அர்ஜுனனுக்கு ஆத்மபலத்தை அளிக்க கீதையை உபதேசம் செய்ய கிருஷ்ணர் இம்மாதம் பிறந்தார். இதனால் தான் ஆவணி மாதத்தில் ஞாயிற்றுக்கிழமை முக்கியத்துவம் பெற்றது. 'ஞாயிறு என்றாலே சூரியன்'.

ஆவணியில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஆன்மிக அறிவை புகட்டினால், அவர்கள் அதில் சிறந்து விளங்குவர். சிலருக்கு இயற்கையாகவே ஆன்மிக அறிவு அமையும். தேகநலனுக்காக சூரிய நமஸ்கார பயிற்சி எடுப்பவர்கள் ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் தொடங்குவது மிகவும் விசேஷமானது.

கிரக தோஷங்கள் நீங்கவும், ஆரோக்கியம் மேம்படவும், செல்வ வளம் அதிகரிக்கவும், பித்ருக்களின் ஆசி நமக்கு பரிபூரணமாக கிடைக்கவும் இந்த ஆவணி ஞாயிறு விரதத்தை அனுஷ்டிக்கலாம். ஆவணி ஞாயிறு விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் கண் தொடர்பான பிரச்சனைகளிலிருந்து முழுமையாக விடுபடலாம் என்பது ஐதீகம்.

ஆவணியில் பயிர்கள் வளர ஆரம்பிக்கும். பூச்சிகள், பாம்புகள் தொல்லை அதிகரிக்கும். இவற்றால் விவசாய பணிகளுக்கு செல்லும் தங்கள் கணவருக்கு

வெல்லம் நன்றாக உருகி, ஒரு மெல்லிய பதத்திற்கு வந்ததும், அதில் துருவிய தேங்காய் மற்றும் ஏலக்காய் தூளை சேர்க்கவும்.

குறைந்த தீயில் நன்றாக கிளறி, எல்லா பொருட்களும் ஒன்றாக கலந்து உலர்ந்த பூரணமாக வரும்படி செய்யவும். இப்பொழுது கொழுக்கட்டைக்கு தேவையான பூரணம் தயார்.

**கொழுக்கட்டை செய்ய:**


முதலில் அரிசி மாவில் உப்பினை கலந்து கொள்ளவும். பின் தண்ணீரை கொதிக்க வைத்து அரிசி மாவில் சிறிது சிறிதாக சேர்த்து நன்கு கிளறி சப்பாத்தி மாவு பதத்திற்கு திரட்டவும்.

பின் அதிலிருந்து எலுமிச்சை அளவு மாவினை எடுத்து உருட்டி கிண்ண வடிவில் செய்து அதில் சிறிதளவு பூரணக்கலவையை இட்டு மூடி உருண்டையாக திரட்டவும்.

திரட்டும்போது பூரணக்கலவை வெளியே வந்துவிடாமல் பார்த்து கொள்ளவும். எல்லா மாவினையும் கொழுக்கட்டைகளாக செய்தபின் இட்லி பானையில் ஆவியில் வேக வைத்து எடுக்கவும்.

விநாயகருக்கு பிடித்த சுவையான கொழுக்கட்டை தயார்.

## பால் கொழுக்கட்டை செய்வது எப்படி?



தேவையான பொருட்கள்:

அரிசி மாவு - 1 கப்

உப்பு - சிறிதளவு

தண்ணீர் - 1 கப்

பால் - 2 கப்

தேங்காய் பால் - 1 கப் (விரும்பினால்)

சர்க்கரை - சுவைக்கேற்ப

ஏலக்காய் தூள் - சிறிதளவு

செய்முறை:

**கொழுக்கட்டை செய்ய:**

ஒரு பாத்திரத்தில் அரிசி மாவை கொட்டுங்கள். அதில் சிறிது உப்பு சேர்த்து

# ஆவணி மாதம் சுபமுகூர்த்த தினங்கள்

(சுபமுகூர்த்த நாட்கள் திருக்கணித பஞ்சாங்கத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது)

### திருமணம் செய்ய உகந்த நாள்
ஆவணி 04 20.08.2025 புதன்
ஆவணி 05 21.08.2025 வியாழன்
ஆவணி 11 27.08.2025 புதன்
ஆவணி 12 28.08.2025 வியாழன்
ஆவணி 13 29.08.2025 வெள்ளி
ஆவணி 19 04.09.2025 வியாழன்
ஆவணி 26 11.09.2025 வியாழன்

### சீமந்தம் செய்ய உகந்த நாள்
ஆவணி 04 20.08.2025 புதன்
ஆவணி 05 21.08.2025 வியாழன்
ஆவணி 11 27.08.2025 புதன்
ஆவணி 12 28.08.2025 வியாழன்
ஆவணி 13 29.08.2025 வெள்ளி
ஆவணி 19 04.09.2025 வியாழன்
ஆவணி 26 11.09.2025 வியாழன்

### கிரக ஆரம்பம் செய்ய உகந்த நாள்
ஆவணி 04 20.08.2025 புதன்
ஆவணி 05 21.08.2025 வியாழன்
ஆவணி 11 27.08.2025 புதன்
ஆவணி 12 28.08.2025 வியாழன்
ஆவணி 13 29.08.2025 வெள்ளி
ஆவணி 19 04.09.2025 வியாழன்
ஆவணி 26 11.09.2025 வியாழன்

### புதிய வண்டி வாங்க உகந்த நாள்
ஆவணி 04 20.08.2025 புதன்
ஆவணி 05 21.08.2025 வியாழன்
ஆவணி 11 27.08.2025 புதன்
ஆவணி 12 28.08.2025 வியாழன்
ஆவணி 13 29.08.2025 வெள்ளி
ஆவணி 19 04.09.2025 வியாழன்
ஆவணி 26 11.09.2025 வியாழன்

### தொழில் துவங்குவதற்கு உகந்த நாள்
ஆவணி 04 20.08.2025 புதன்
ஆவணி 05 21.08.2025 வியாழன்
ஆவணி 11 27.08.2025 புதன்
ஆவணி 12 28.08.2025 வியாழன்
ஆவணி 13 29.08.2025 வெள்ளி
ஆவணி 19 04.09.2025 வியாழன்
ஆவணி 26 11.09.2025 வியாழன்

### கணபதி ஹோமம் செய்வதற்கு உகந்த நாட்கள்
ஆவணி 02 18.08.2025 திங்கள்
ஆவணி 09 25.08.2025 திங்கள்
ஆவணி 11 27.08.2025 புதன்
ஆவணி 13 29.08.2025 வெள்ளி
ஆவணி 19 04.09.2025 வியாழன்
ஆவணி 26 11.09.2025 வியாழன்

### திலஹோமம் / பித்ரு பூஜை செய்வதற்கு உகந்த நாட்கள்
ஆவணி 01 17.08.2025 ஞாயிறு
ஆவணி 05 21.08.2025 வியாழன்
ஆவணி 07 23.08.2025 சனி
ஆவணி 15 31.08.2025 ஞாயிறு
ஆவணி 23 08.09.2025 திங்கள்
ஆவணி 26 11.09.2025 வியாழன்
ஆவணி 29 14.09.2025 ஞாயிறு
ஆவணி 30 15.09.2025 திங்கள்

### போர் போட உகந்த தினம்
ஆவணி 11 27.08.2025 புதன்
ஆவணி 19 04.09.2025 வியாழன்

### காது குத்து வைக்க உகந்த தினம்
ஆவணி 19 04.09.2025 வியாழன்
ஆவணி 21 06.09.2025 சனி

# ஆவணி மாத விரத தினங்கள்

| விரதத்தின் பெயர் | தமிழ் மாதம் | கிழமை / தேதி | வழிபாடு மற்றும் பலன்கள் |
|---|---|---|---|
| கிருத்திகை விரதம் | ஆவணி 27 | 12.09.2025 வெள்ளி | முருகப்பெருமானையும், மகாலட்சுமியையும் வழிபட்டு பின்பு போஜனம் செய்துவர மழலை செல்வமும், ஐஸ்வர்யமும் உண்டாகும். |
| தேய்பிறை சஷ்டி | ஆவணி 28 | 13.09.2025 சனி | விரதமிருந்து முருகரை வழிபாடு செய்துவர செல்வ சேர்க்கையையும், உயர் பொறுப்புகளையும் அடைய முடியும். |
| தேய்பிறை அஷ்டமி | ஆவணி 29 | 14.09.2025 ஞாயிறு | மாலையில் காலபைரவரை வழிபாடு செய்துவர ஆயுள் விருத்தி உண்டாகும். |

# ஆவணி மாத ராசிபலன்



## விடாப்பிடியாக செயல்படும் மேஷ ராசி அன்பர்களே..!!



சூரியன் 05ல் இருப்பதால் உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்து செல்லவும். சிந்தனை போக்கில் கவனம் வேண்டும்.

செவ்வாய் 06ல் இருப்பதால் நெருக்கமானவர்களிடம் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் குறையும். எதிலும் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள்.

ஆவணி 29 முதல் செவ்வாய் 07ல் இருப்பதால் பேச்சுக்களில் பொறுமை வேண்டும்.

புதன் 04ல் இருப்பதால் தொழில் சார்ந்த வியூகங்களை அமைக்கும் போது சந்தை நிலவரத்தை அறிந்து செயல்படவும்.

ஆவணி 09 முதல் புதன் 05ல் இருப்பதால் நிபுணர்களின் ஆலோசனைகள் மூலம் செயல்பாடுகளில் சிறு மாற்றங்களை செய்வீர்கள்.

ஆவணி 26 முதல் புதன் 06ல் இருப்பதால் உடல் ஆரோக்கிய தொடர்பான இன்னல்களை புரிந்து கொள்வீர்கள்.

சுக்கிரன் 03ல் இருப்பதால் உடன் பிறந்தவர்கள் மூலம் ஒத்துழைப்பான சூழல் ஏற்படும். புதிய வேலை நிமித்தமான சிந்தனைகள் மேம்படும்.

குரு 03ல் இருப்பதால் மனதில் இருந்து வந்த கவலைகள் நீங்கி புத்துணர்ச்சி பெறுவீர்கள்.

சனி 11ல் இருப்பதால் விருப்பமான விஷயங்களில் ஆர்வம் இன்றி செயல்படுவீர்கள்.

ராகு 11ல் இருப்பதால் மூத்த உடன்பிறப்புகள் சாதகமாக செயல்படுவார்கள்.

கேது 05ல் இருப்பதால் விவசாய பணிகளில் மத்தியமான வரவுகள் உண்டாகும்.

**வழிபாடு**: சிவபெருமானை வழிபட எண்ணம் ஈடேறும்.